தனியார் பள்ளி மாணவர் பரிசு வென்றது. இவர்

வாழ்த்தி, பாராட்டினர்.



மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவமனை, யு.எஸ்.ஏ., கேப்லான் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. அருகில் கேப்லான் இயக்குநர் டென்சின் ஜெம்யங், இந்திய தலைமை அதிகாரி அபிஷேக் பவாதங்கர், கல்லூரி இயக்குநர் ராஜகோவிந்தன், துணை இயக்குநர் காக்னே, அகாடமிக் டீன் கார்த்திகேயன், ரிசர்ச் டீன் கலைச்செல்வன்,

# மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி கேப்லான் நிறுவனத்துடன் ஒப்பந்தம்

**புதுச்சேரி, ஆக. 19–** மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி, யு.எஸ்.ஏ., கேப்லான் புரிந்துணர்வு ஒப்பந்தம் புரிந்துள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் மணக்குள விநாயகர் கல்விக் குழும மேலாண் இயக்குநர் தனசேகரன், கேப்லான் இயக்குநர் டென்சின் ஜெம்யங் ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு ஆவணங்களை பரிமாறிக்கொண்டனர்.

கேப்லான்னின் இந்திய தலைமை அதிகாரி அபிஷேக் பவாதங்கர், மணக்குள விநாயகர் கல்விக் குழும செயலாளர் டாக்டர் நாராயணசாமி கேசவன், பொருளாளர் ராஜராஜன், மருத்துவ கல்லூரி இயக்குநர் ராஜகோவிந்தன், துணை இயக்குநர் காக்னே, அகாடமிக் டீன் கார்த்திகேயன், ரிசர்ச் டீன் கலைச்செல்வன், மருத்துவமனை கண்காணிப்பாளர் பிரகாஷ், துணை கண்காணிப்பாளர்கள் கிரிஜா, ஜெய்ஸ்ரீ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம், கேப்லான் கற்றல் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள உலகப் புகழ் பெற்ற நிறுவனமாகும். இந்த நிறுவனம் மணக்குள விநாயகர் மருத்துவமனை கல்லூரியில் தன்னுடைய கற்றல் செயல்பாடுகளை விரிவாக்கம் செய்து, மாணவர்களுக்கு பயிற்சியை அளிக்கும்.

நெக்ஸ்ட் தேர்வு மருத்துவ மாணவர்களுக்கு தற்போது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. எனவே நெக்ஸ்ட் தேர்வில் மணக்குள விநாயகர் மருத்துவ மாணவர்கள் தேர்ச்சி பெற சிறந்த பயிற்சி அளிக்க உள்ளது. இது தவிர யு.எஸ். எம்.எல்.இ., உள்ளிட்ட சர்வதேச அளவிலான தேர்வுகளுக்கு பயிற்சியை அளிக்கும். மேலும் சர்வதேச பணி வாய்ப்புகளில் தகுதி பெறுவதற்கும் திறன் பயிற்சி அளிக்க உள்ளது.

மேலாண் இயக்குநர் தனசேகரன் பேசுகையில், கேப்லான் நிறுவனத்துடன் இணைவதன் மூலம் மணக்குள விநாயகர் மருத்துவ கல்லூரி மாணவர்கள் மருத்துவ பயிற்சியை மேற்கொண்டு மருத்துவ துறையில் சிறந்து விளங்க முடியும் என்றார்.

## ஏ.எம்.ஆ… விடுதி திற…

**புதுச்சேரி, ஆக. 19–** பாக்கமுடையான் பேட்டை ஏ.எம்.ஆர். இன் தங்கும் விடுதி திறப்பு விழா நேற்று நடந்தது.

புதுச்சேரி பாக்கமுடையான்பட்டு மெயின்ரோடு, வினோபா நகர் சந்திப்பு அருகே ஏ.எம்.ஆர். இன் என்ற புதிய தங்கும் விடுதி கட்டப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழா நேற்று நடந்தது. முத்திரைப்பாளையம் புஷ்பகாந்தி பற்குணம் தலைமை தாங்கினார். தேவி ஸ்ரீ கருமாரியம்மன்

## ராஜிவ் காந்தி அர…